**පාර්ලිමේන්තු ප්‍රකාශන මාලා අංකය: 492**

**ආයතනයේ නම : දිස්ත්‍රික් ලේකම් කාර්යාලය, මුලතිව්**

පාර්ලිමේන්තුවේ රජයේ ගිණුම් පිළිබඳ කාරක සභාව විසින් සභාගත කරන ලද වාර්තාව සම්බන්ධයෙන්, ස්ථාවර නියෝග අංක 119(4) යටතේ ගරු අමාත්‍යතුමාගේ නිරීක්ෂණ සහ ගනු ලැබූ පියවර පාර්ලිමේන්තුව වෙත ඉදිරිපත් කිරීම.

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இலக்கம்: 492

நிறுவனத்தின் பெயர் :- மாவட்டச் செயலகம், முல்லைத்தீவு

பாராளுமன்ற அரச கணக்கு குழுவினால் முன்வைக்கப்பட்ட அறிக்கை தொடர்பாக நிலையியற் கட்டளை இலக்கம் 119(4) இன் கீழ் கௌரவ அமைச்சரின் அவதானிப்புக்களும் மற்றும் அது தொடர்பாக எடுக்கப்படும் நடவடிக்கைகளும் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பித்தல்.

**Parliamentary Series No :- 492**

**Name of the Institution :- District Secretariat, Mullaitivu**

**Submission of observation Of Hon. Minister and steps taken with regard to the report table by the Committee on Public Accounts in terms of Standing Order No. 119(4)**

## செயலாளரின் பரிந்துரை

மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதுடன் அடையாளம் காணப்பட்ட குறைபாடுகளுக்கு தனிப்பட்ட கவனம் செலுத்தி அவற்றை நிவர்த்தி செய்வதற்கான நடவடிக்கைகளை எடுக்குமாறு மாவட்ட செயலாளரிக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது.

திரு. எஸ். ஆலோகபண்டார
செயலாளர்
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

S. Alokabandara
Secretary
Ministry of Public Administration,
Provincial Councils and Local Government

## அமைச்சரின் பரிந்துரைகள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்

அரசாங்க கணக்குக்குழு மூலம் மாவட்ட செயலாளரிற்கு வழங்கப்பட்டிருக்கும் ஆலோசனைகளுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, அக்குறைபாடுகள் மீண்டும் ஏற்படாமல் இருக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க அமைச்சின் செயலாளரிற்கு நான் அறிவுறுத்தியுள்ளதுடன், அச்செயற்பாடுகள் மூலம் 2026 ஆம் ஆண்டிற்குள் அதன் அடைவு மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை எட்ட முடியும் என்று எதிர்பார்க்கின்றேன்.

மாண்புமிகு (பேராசிரியர்) ஏ. எச். எம். எச். அபயரத்ன அவர்கள் (பா.உ)
பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு

Prof. A.H.M.H. Abayarathna
Minister of Public Administration, Provincial
Councils and Local Government
Independence Square, Colombo 07.

பாராளுமன்ற வெளியீட்டுத்தொடர் இலக்கம் :- 492

நிறுவனத்தின் பெயர் :- மாவட்ட செயலகம், முல்லைத்தீவு

<u>பகுதி I</u>

| தொ.இல | செயல்திறன் மதிப்பீட்டு அறிக்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள தவறுகள் | தவறுகளை சீர்செய்ய நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை. |
|---|---|---|
| 01. | ஆபத்துக்கள் தொடர்பான பதிவேடு கால அடிப்படையில் பாரமரிக்கப்படவில்லை. | ஆபத்துக்கள் தொடர்பான பதிவேடு தற்போது பராமரிக்கப்பட்டு வருகின்றது. 2024 ஆம் ஆண்டிற்கான செயல்திறன் மதிப்பீட்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டது. |
| 02. | 2004.05.11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையின் பிரகாரம் மென்பொருள் தொடர்பான முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் கடவுச்சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாற்றப்படவில்லை. | 2004.05.11 ஆம் திகதிய 171/2004 இலக்க சுற்றறிக்கைக்கமைவாக மென்பொருள் தொடர்பான முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் கடவுச்சொற்கள் மூன்று மாதங்களுக்கு ஒரு தடைவை மாற்றப்படுகின்றது. இதற்கு ஏடு ஒன்றும் பேணப்பட்டு வருகின்றது. |
| 03. | கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அனைத்து கணக்காய்வு ஐயவினாக்களுக்கும் ஒரு மாத காலத்திற்குள் பதில்கள் அனுப்பப்படவில்லை. | தற்போது அனைத்து ஐய வினாக்களுக்கும் ஒரு மாதத்திற்குள் பதில்கள் அனுப்பப்படுகின்றது. |
| 04. | ஒரு வாகனம் பாவனையிலுருந்து ஒதுக்கப்பட்டு 08 மாதங்களுக்கும் குறைவான காலப்பகுதியில் அகற்றறப்படவில்லை. | மாவட்ட செயலகத்திலும் பிரதேச செயலகங்களிலும் பயன்படுத்தப்படாத வாகனங்கள் உரிய முறைப்படி அகற்றப்பட்டு வருகின்றது. |

பகுதி II

| தொ.இல | செயல்திறன் மதிப்பீட்டு அறிக்கையில் அடையாளம் காணப்பட்டுள்ள தவறுகள் | தவறுகளை சீர்செய்ய நிறுவனத்தினால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் / தற்போதைய நிலைமை. |
|---|---|---|
| 01. | மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்கள் மாதந்தோறும் இடம்பெறவில்லை. | தற்போதைய சுற்றுநிருபத்தின் படி மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு கூட்டங்கள் தற்போது காலாண்டிற்கு ஒரு முறை நடாத்தப்பட்டு வருகின்றது. |
| 02. | மாவட்ட செயலாளரினால் கூட்டப்பட்ட பிரதேச செயலாளர்கள் கூட்டங்கள் மாதாந்தம் இடம்பெறவில்லை. | பிரதேச செயலாளர்கள் கூட்டங்கள் ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு பிரதேச செயலகங்களில் சுழற்சி முறையாக இடம்பொற்று வருகின்றது. |
| 03. | மாவட்ட வீடமைப்புக்குழு மாதந்தம் கூட்டப்படவில்லை | மாவட்ட வீடமைப்புக்குழு கூட்டம் ஒவ்வொரு மாதமும் கிரமமாக இடம்பெறுகின்றது. |
| 04. | மாவட்ட உர ஒருங்கிணைப்பு குழு மாதந்தம் கூட்டப்படவில்லை. | தேவைப்பாடுகள் ஏற்படும் போது மாவட்ட உர ஒழுங்கிணைப்பு குழு கூட்டம் நடாத்தப்படுகின்றது |
| 05. | நிறுவனத்தின் பிரஜைகள்/சேவை பெறுநர் பட்டயம் அமுலாக்கப்படுதல் பற்றி மேற்பார்வை செய்வதற்கும் மதிப்பீடு செய்வதற்குமான முறையியலொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது பிரஜைகள்/சேவை பெறுநர் பட்டயம் உருவாக்கப்பட்டு அமுலாக்கம் செய்யப்படுகின்றது. இதனை மதிப்பீடு செய்வதற்கான முறைமை ஒன்றும் உருவாக்கப்படுகின்றது. |
| 06. | பொதுநிர்வாக ஏற்பாடுகளுக்கு இணங்க முறையான மனிதவளத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | தற்போது சுற்றுநிருபங்களுக்கு அமைய மேற்கொண்டு தயாரிக்கப்பட்டு வருகின்றது. |
| 07. | நிறுவனத்தின் கணக்குகள் பற்றிய கணக்காய்வு அபிப்பிராயம் தகுதியான / ஒப்புதலளிக்க மறுக்கின்ற / பாதகமான மட்டத்தில் நிலவியது. | தகுதியான அபிப்பிராயத்தினை வெளிப்படுத்துவதற்கு பாதகமான மட்டத்தில் நிலவிய காரணிகள் கண்டறியப்பட்டு அவை நிவர்த்தி செய்யப்பட்டுள்ளன. |
| 08. | 2005 ஆம் ஆண்டின் 13 ஆம் இலக்க இலங்கை அனர்த்த முகாமைத்துவ சட்டத்தின் பிரகாரம் அனர்த்த முகாமைத்துவக்குழு கூட்டங்கள் நடாத்தப்படவில்லை. | தற்போது அனர்த்த முகாமைத்துவ குழு கூட்டமானது காலாண்டிற்கு ஒரு தடவை நடாத்தப்பட்டு வருகின்றது. |

..........................
அ. உமாமகேஸ்வரன்,
மாவட்டச் செயலாளர்,
மாவட்டச் செயலகம்,
முல்லைத்தீவு.

A.Umamaheswaran
District Secretary/Government Agent
Mullaitivu

S. ..........................
ச.ரஞ்சித்குமார்,
பிரதம கணக்காளர்,
மாவட்ட செயலகம்,
முல்லைத்தீவு

S. RANJITHKUMAR
Chief Accountant
For District Secretary
District Secretariat
Mullaitivu